

தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் தொகுதியின் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் கழக வெற்றி வேட்பாளர் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் திருவிடை மருதூர் தொகுதியில் இறுதிக்கட்ட பிரச்சாரம் மேற்கொண்டார். உடன் முன்னாள் எம்.பி. செ.இராமலிங்கம், ஒன்றிய செயலாளர் கோ.க.அண்ணாதுரை, பேரூர் செயலாளர் பஞ்சநாதன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் பங்கேற்றனர்.



ஈரோடு மேற்கு சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் கழக வேட்பாளர் சு.முத்துசாமி இறுதி கட்ட பிரச்சாரத்தில் ஈடுபட்டு உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார். வாக்கு சேகரிப்பில் மேற்கு சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் மீனா ஜெயக்குமார், டி.எஸ்.குமாரசாமி உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சியின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# திருமயம் தொகுதி மக்களுக்கு எனது சொந்த செலவில் நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!



புதுக்கோட்டை, ஏப். 23 -

திருமயம் சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர், அமைச்சர் எஸ்.ரகுபதி செய்தியாளர்களுடன் கூறியதாவது:

தேர்தல் களத்தில் தலைவர் தளபதி அவர்களின் தலைமையிலான திமுக ஆட்சிக்கு மிகப்பெரிய வரவேற்பு உள்ளது. நண்பர்கள் அனுபவசாலிகள் சிலர் என்னிடம் கூறிய போது சென்னை முதல் கன்னியாகுமரி வரை பயணம் செய்தோம். திராவிடம் ஆனால் ஆட்சிக்கு எதிரான அலை எந்த இடத்திலும் இல்லை மாறாக ஆதரவலை மட்டுமே உள்ளது என்று கூறினார். இந்த நிலை இருந்தாலே மிகப்பெரிய வெற்றியாக அமையும். இன்றைக்கு மகளிரை காக்கும் கவசமாக தளபதி அவர்கள் இருந்து கொண்டு இருக்கிறார்கள். தளபதி அவர்களை எந்த அம்புகளோ ஈட்டிகளையோ வீசினாலும் மகளிர் என்ற கவசத்தை தாண்டி செல்வது என்பது செல்ல முடியாத காரியம்.

அதே போல் பெண்கள் வாக்குகள் மிகப்பெரிய அளவில் ஆதரவாக இருக்கிறது.

70 முதல் 75 சதவீதம் வரை மகளிர் ஆதரவு இருப்பதால் கள நிலவரம் நன்றாக இருக்கிறது. தலைவ மு.க.ஸ்டாலின் அவர்களின் திட்டங்களை நாங்கள் போவதற்கு முன்பாகவே மக்கள் சொல்லிவிடுகிறார்கள். திராவிட மாடல் ஆட்சியின் திட்டங்களினால் பயன்அடையாத குடும்பமே கிடையாது. எந்த கட்சியாக இருந்தாலும் எந்த இயக்கமாக இருந்தாலும், அவர்கள் அனைவரும் திராவிட மாடல் ஆட்சியின் திட்டங்களினால் பயன் அடைந்தவர்களாக இருக்கின்றனர். இது எங்களுக்கு மிகப்பெரிய வெற்றியைத் தரும்.

தி.மு.க. தேர்தல் அறிக்கை கதாநாயகன் மட்டுமல்ல கதாநாயகியும் கூட என தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். மகளிர் உரிமைத் தொகை 2000 ரூபாயாக உயர்த்தப்படும் தமிழ் புதல்வன் புதுமைப் பெண் திட்டத்தில் 1500 ரூபாயாக வழங்கப்படும். எட்டாம் வகுப்பு வரை காலை உணவு திட்டம் விரிவாக்கம் என பல வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட இருக்கின்றன. இவற்றையெல்லாம் விட பெரிய வயவேற்பினை பெற்றிருப்பது ஸ்டாலின் கூப்பன் என்கிற கூப்பன் 8000 ரூபாய்க்கு வழங்கப்பட்டு அவர்களுக்கு விருப்பமான பொருட்களை பெற்றுக் கொள்ளலாம் என்பது தான்.

திருமயம் தொகுதியில் நலத்திட்டப் பணிகள் நிறைய நிறைவேற்றி உள்ளேன். மீண்டும் வெற்றி பெற்றதும் இன்னும் அதிகமான திட்டங்களை நிறைவேற்றுவோம். ரூ. 25 ஆயிரம் முதல் ஒரு லட்சம் வரை எங்கள் அறக்கட்டளையிலிருந்து திருமயம் தொகுதியில் கல்வி பயிலும் மாணவ மாணவியருக்கு 150 முதல் 200 பேர் வரை உதவி தொகை வழங்கப்படும். திருமண உதவித்தொகை 25 ஆயிரம் வழங்கப்படும். முதியோர் விடுதி கட்டி அரசிடம் ஒப்படைக்கப்படும். மாணவியர் கல்வி பயிலும் வழியில் மாணவர் விடுதி கட்டி அரசிடம் ஒப்படைத்து பயன்படுத்த செய்யப்படும். பொன்னமராவதி காரையூர் அரிமளம் பகுதியில் மாணவியர் விடுதி அமைத்து தரப்படும் இவ்வாறு அவர் கூறினார்.

---

### பாலக்கோடு தொகுதியில் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்

# கே.பி.அன்பழகன் 25 ஆண்டுகளாக எந்த வளர்ச்சி திட்டங்களையும் செயல்படுத்தவில்லை!

## பாலக்கோடு தி.மு.க. வேட்பாளர் டாக்டர்.டி.என்.வி.எஸ்.செந்தில்குமார் பேட்டி!



தருமபுரி, ஏப். 23 -

தருமபுரி மாவட்டம் பாலக்கோடு சட்டமன்ற தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் போட்டியிடும் திமுக வேட்பாளர் முன்னாள் எம்.பி.டாக்டர்.டி.என்.வி.எஸ்.செந்தில்குமார் பாலக்கோடு நகர் பகுதியில் இறுதி நாள் பிரச்சாரத்தை மேற்கொண்ட பின் செய்தியாளர்களை சந்தித்தார் அப்போது அவர் தெரிவித்ததாவது:

பாலக்கோடு தொகுதியில் 25 ஆண்டு காலமாக சட்டமன்ற உறுப்பினராக இருந்த கே.பி.அன்பழகன், விவசாயம், வளர்ச்சி சார்ந்த திட்டங்கள், நீர்ப்பாசன திட்டங்கள் என எதையும் இதுவரை செய்யவில்லை என்பது இப்பகுதி மக்களின் குற்றச்சாட்டு, சாலை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் கூட பல இடங்களில் செய்து தரவில்லை. பழங்குடியினர்,இஸ்லாமியர், ஆதிதிராவிடர் வாழக்கூடிய பகுதிகளில் கூட அடிப்படை வசதிகள் எதுவும் செய்து தரவில்லை. இதுவரை 6 கிராமங்களில் அடிப்படை வசதியான கழிப்பறை கூட இல்லாத அவலநிலை இருக்கிறது.25 ஆண்டு காலமாக அமைச்சராக இருந்த கே.பி.அன்பழகன் இதைக்கூட செய்யவில்லை, சுதந்திரம் அடைந்து இத்தனை ஆண்டுகளில் இன்னும் ஒரு சில கிராமத்தில் கழிப்பறை கூட இல்லாத நிலை மிகவும் மோசமானது,

அண்டை மாவட்டமான கிருஷ்ணகிரி ஓசூரில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் இருக்கும் போது கேபி அன்பழகன் அமைச்சராக இருந்த பொழுது அவர் நினைத்திருந்தால் படித்த இளைஞர்கள் வேலை வாய்ப்பு கிடைத்திருக்கும். குறைந்தது இரண்டு தொழிற்சாலைகளை கொண்டு வந்திருந்தால், கூட படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்திருக்கும்.

விவசாயத்தை நம்பி இருக்கின்ற பாலக்கோடு பகுதிகளுக்கு நீர் பாசன திட்டங்கள் இல்லை. இங்கு இருக்கின்ற சர்க்கரை ஆலை நாட்டின் சிறந்த சர்க்கரை ஆலை ஆக விருது பெற்றது. ஆனால் இன்று கரும்பு உற்பத்தி இல்லை என்பதால், மூடும் நிலைமையில் இருந்து வருகிறது.

கே.பி.அன்பழகன் என்றால் மக்களுக்கு ஒரு பயமான நிலை தான் இருந்து வருகிறது. இவரை கேள்வி கேட்ட ஒருவரை அவரது ஆதரவாளர்கள் தாக்கியுள்ளனர்.தற்போது அவரை எதிர்த்து திமுக சார்பில் நாம் போட்டியிடும் போது மக்கள் ஓரணியில் திரண்டு நம் பின்னாடி இருக்கிறார்கள். பாலக்கோட்டில் மிகப்பெரிய வெற்றியை தர தயாராகி இருக்கிறார்கள்.தேர்தல் வரும் நேரத்தில் மட்டும் கே.பி.அன்பழகன் எல்லோருடைய வீடுகளுக்கும் சேலை கொடுக்கிறார்கள். ஆனால் இப்பகுதி மக்கள் எங்களுக்கு வேலை தான் முக்கியம் என சொல்கிறார்கள். வேலை இருந்தால் சேலையை நாங்களே வாங்கிக் கொள்வோம் என்று தெரிவிக்கின்றனர்.

பாலக்கோடு பகுதி மக்களுக்கு நான் அளிக்கின்ற வாக்குறுதி எனக்கு நீங்கள் வாக்களித்து வெற்றி பெற செய்தால் கழகதலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய திட்டங்களால் இந்த தொகுதி நாட்டில் சிறந்த தொகுதியாக மாறி இருக்கும் என்று உறுதி அளித்திருக்கிறேன். இந்த பகுதியில் இருந்து தக்காளி, மாம்பழம், தென்னை உள்ளிட்ட விவசாய பொருட்கள் மதிப்பு கூட்டு பொருள்கள் தயாரித்து அவர்களுக்கு நல்ல லாபம் கிடைக்கின்ற வகையில் மதிப்பு கூட்டு தொழிற்சாலையை கொண்டு வரப்படும், பன்னாட்டு நிறுவனங்களுடன் சேர்ந்து தக்காளி கூழ் பேக்டரி கொண்டு வரப்படும்,காய்கறிகள் இந்த பகுதியில் அதிகமாக உற்பத்தி ஆகிறது. ஆனால் ராயக்கோட்டை சென்று அங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறது. அதற்கு குளிர்சாதன வசதிகளுடன் கூடிய பெரிய சந்தை உருவாக்கப்படும் இவை அனைத்தும் மே நான்காம் தேதிக்கு பிறகு நடைபெறும்.

இந்த எண்ணேகோல் புதூர் திட்டத்தை நிறைவேற்ற 8 மாதங்கள் போதும்.திராவிட மாடல் ஆட்சியில் இந்த மாவட்டமே மாறப் போகிறது. பாலக்கோடு மிக செழிப்பான விவசாயம் சார்ந்த பகுதியாக இருக்கும். தமிழ்நாட்டிலேயே இது மாதிரியான வளர்ச்சி எங்கும் இல்லை என்று சொல்லும் நிலையில் சிறப்பான திட்டங்களை இந்த தொகுதியில் நமக்கு கழகதலைவர் மாண்புமிகு முதலமைச்சர் செயல்படுத்துவார் என்று நான் உறுதி அளிக்கிறேன். நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த பொழுது சாலையில்லாத மலை கிராமங்களுக்கு சாலை உள்ளிட்ட 12000 கோடிக்கு நலத்திட்ட உதவிகளை தருமபுரி மாவட்டத்திற்கு கொண்டு வந்திருக்கின்றேன். இதைப் பற்றி எங்கும் நான் பேசவில்லை. வளர்ச்சிக்கான திட்டத்தை மட்டும் தான் பேசி இருக்கேன். அதேபோல் கே.பி. அன்பழகனை தனிப்பட்ட முறையில் எங்கும் விமர்சனம் செய்ய வில்லை,வளர்ச்சி வேண்டும் அடுத்த தலைமுறைக்கு வளர்ச்சிகரமான பாலக்கோட்டை ஒப்படைக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். எல்லா திட்டங்களையும் செய்து தருமபுரி மாவட்டம் விவசாய மற்றும் தண்ணீர் பற்றாக்குறை இல்லாத மாவட்டமாக உருவாக போகிறது என்று அவர் தெரிவித்தார்.



கோபி சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் கழக வேட்பாளர் என்.நல்லசிவம் இறுதி கட்ட பிரச்சாரத்தில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார். வாக்கு சேகரிப்பில் கோபி சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் வி.சி. சந்திரகுமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



கோவை தெற்கு சட்டமன்றத் தொகுதி, மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கழக வேட்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி தனது இறுதி பிரச்சாரத்தை சிவானந்தா குடியிருப்பு பகுதியில் நிறைவு செய்தார். இதில் கோவை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார், மாநகர் மாவட்ட துணை செயலாளர் கோட்டை அப்பாஸ் உள்பட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

# தருமபுரியில் 5 தொகுதிகளிலும் தி.மு.க. கூட்டணியே வெல்லும்!

## மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் பேட்டி!



தருமபுரி, ஏப். 23 -

தமிழ்நாட்டில் திராவிட பேரரசர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான கூட்டணியின் வெற்றி என்பது உறுதியான ஒன்று,கழகத்தலைவர், முதலமைச்சர் கூறியதை போல் 200 க்கும் மேற்பட்ட தொகுதிகளில் இந்த கூட்டணி நிச்சயம் வெற்றி பெறும்.

கடந்த 5 ஆண்டுகளில் தி.மு.க. அரசு நிறைவேற்றியுள்ள திட்டங்களில் பெரும்பான்மையான திட்டங்கள் மகளிர் மற்றும் இளைஞர்களுக்கானது உதாரணமாக மகளிர் உரிமை தொகை,நான் முதல்வன், தமிழ்புதல்வன்,விடியல் பயணம் போன்றவை நாட்டின் கடைக்கோடி மகளிர் மற்றும் இளைஞர்களை சென்றடைந்து இருக்கிறது,அது தேர்தல் பரப்புரையின் போது அவர்கள் அளிக்கும் உற்சாக வரவேற்பின் மூலம் நமக்கு தெரிகிறது.மேலும் கடந்த கால தேர்தல்களை விட இந்த தேர்தல் வித்தியாசமானது என்று கழகதலைவர் கூறியது போல திமுகவா? அதிமுகவா? என்கிற தேர்தல் அல்ல இது தமிழ்நாடா? டெல்லியா? என்று பார்க்கிற தேர்தல் என்பதை மக்கள் நன்கு உணர்ந்து இருக்கின்றனர்.

முதல்மைச்சரின் தமிழ்புதல்வன்,தாயுமானவன்,மக்களை தேடி மருத்துவம், என அனைத்து திட்டங்களாலும் ஒவ்வொரு குடும்பத்தில் உள்ள யாராவது ஒருவர் நிச்சயம் பயன்படும் வகையில் செயல்படுத்தி உள்ளார்.இதனால் அனைத்து தரப்பு மக்களும் மீண்டும் கழகதலைவர் மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசே ஆட்சியமைக்க வேண்டும் என்று விரும்புகின்றனர்.

கழகதலைவர் கூறியதை போல தேர்தல் களத்தில் திமுகவின் தேர்தல் அறிக்கை சூப்பர்ஸ்டார் தான்,முதலமைச்சர் சொன்னால் நிச்சயம் செய்து கொடுப்பார் என்ற நம்பிக்கை நாட்டு மக்களிடையே இருக்கிறது,இல்லதரசி திட்டம் மூலம் வழங்க இருக்கிற ரூ.8000 கூப்பன்,மகளிர் உரிமைத் தொகை ரூ.2000 ஆக உயர்த்தி தருவது,5 லட்சம் கலைஞர் கனவு இல்லம் போன்ற திட்டங்கள் கடந்த முறை திமுகவிற்கு வாக்களிக்காத மக்களையும் இம்முறை திமுக மற்றும் அதன் கூட்டணி வேட்பாளர்களுக்கு வாக்களிக்க தயாராக்கி உள்ளது. மகளிர் உரிமைத்தொகையை செயல்படுத்த முடியாது என்று எள்ளி நகையாடிய அதிமுகவும்,பாஜகவும் இன்று தங்கள் தேர்தல் அறிக்கையில் அதனை சேர்க்கின்ற வகையில் நமது தேர்தல் அறிக்கையின் தாக்கம் உள்ளது, இந்திய துணைக்கண்டமே பின்பற்றும் வகையிலான தேர்தல் அறிக்கையை தான் திமுக அளித்துள்ளது.

எனவே தருமபுரி மாவட்டத்தின் தருமபுரி, அரூர், பாப்பிரெட்டிப்பட்டி, பென்னகரம், பாலக்கோடு ஆகிய 5 சட்டமன்ற தொகுதிகளிலும் நிச்சயம் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் திமுக மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்கள் வெற்றி பெறுவது உறுதி.

தருமபுரி மாவட்டத்தை பொறுத்தவரை மணியம்பாடியில் கலைஞர் பல்கலைக் கழகம்,மாணவர்கள் பயன் பெற அறிவு சார் மையம், படித்த இளைஞர்கள் பயன் பெற சிப்காட் தொழில் மையம்,புவிசார் வர்த்தக மையம்,விளையாட்டு துறையில் மினி ஸ்டேடியம் உள்ளிட்ட பல மாவட்டத்தின் வளர்ச்சிக்கு உதவும் திட்டங்கள் செயல்படுத்தப் படும்,மேலும் ஏற்கனவே ரூ.36.15 கோடி மதிப்பில் துவங்கப்பட்டுள்ள வெண்ணாம்பட்டி ரயில்வே மேம்பாலம்,ரூ.82.15 கோடி மதிப்பில் தொடங்கப்பட்டுள்ள பாதாள சாக்கடை திட்டங்கள் விரைந்து முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு வரும்.

தென்மாநிலங்களின் குரலை ஒடுக்க ஒன்றிய அரசு கொண்டு வந்த வஞ்சக தொகுதி வரையறை சட்டத்தை கழகதலைவர் மாண்புமிகு முதலமைச்சர் துணிவுடன் எதிர்த்து தமிழ் நாட்டின் குரலை வலுவாக பதிவு செய்து அந்த சட்டத்தை தோற்கடித்துள்ளார்.தமிழ்நாடு தேர்தலில் தி.மு.க. வெற்றியின் முன்னோட்டமாகவே இந்த வெற்றி கிடைத்துள்ளது.

இந்தியாவிலேயே வேலைக்கு செல்லும் பெண்கள் அதிகம் உள்ள மாநிலமாக தமிழ்நாடு தொடர,படித்த இளைஞர்கள் வேலை தேடி வெளியூருக்கு செல்லாமல் அவரவர் பகுதிகளிலேயே வேலை வாய்ப்பை பெற,விளையாட்டு துறையில் பல்வேறு இளம் திறமையாளர்களை அடையாளம் கண்டு அவர்கள் சாதிக்க,இது போன்ற எண்ணற்ற மக்கள் நலத் திட்டங்கள் தொடர மக்கள் திமுகவிற்கு வாக்களிக்க தயாராக உள்ளனர்.

எனவே மாண்புமிகு முதலமைச்சர் சொன்னதை போல் 200 க்கும் மேற்பட்ட தொகுதிகளில் நிச்சயம் திமுக கூட்டணி வெற்றி பெறும் என்று பாப்பிரெட்டிப்பட்டி தொகுதி வெற்றி வேட்பாளர்,திமுக மேற்கு மாவட்ட செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் தெரிவித்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கா.மு. கதிரவன்

ஏப்ரல் 23 (1995)



இளமைக்காலம் முதல் திராவிட இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு நெல்லை மாவட்டத்தில் இயக்கம் வளர்த்தவர்.

நெல்லை மாவட்டக் கழகச் செயலாளராகவும், தமிழக அரசு கொறடாவாகவும் பணியாற்றியவர்.

“இஸ்லாமிய சமுதாயத்து இளைஞர் சம்சுதீன்; இந்த இயக்கத்திற்குத் தன்னைக் கதிரவன் என்று அடையாளம் காட்டிக் கொண்டவர். ஒரு முப்பதாண்டு காலத்திற்கு மேலாகத் திராவிட இயக்கத்தின் நன்முத்தாக ஒளிவிட்டு; தமிழக முழுதுமுள்ள கழக உடன்பிறப்புக்களின் இதயங்களில் எல்லாம் இடம்பெற்று; அமைதி நிறைந்த தோற்றத்தினால் – ஆர்ப்பாட்டமற்ற பேச்சினால் – ஆடம்பரமற்ற நடவடிக்கைகளினால் – பழகுவதற்கு இனிய பண்பாளர்” என தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.